# பத்திரிக்கைச் செய்தி

## குற்றப்பத்திரிக்கையில் புகார்தாரரின் உறவினர் பெயரை நீக்குவதற்காக லஞ்சம் வாங்கிய சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களுக்கு 3 வருட சிறை தண்டனை விதித்து தீர்ப்பு

2011ம் வருடம் புகார்தாரர் மற்றும் அவரது உறவினர் மீது அண்டை வீட்டாருடன் ஏற்பட்ட வேலி தகராறு வழக்கில் நாகப்பட்டினம் மாவட்டம் கீழையூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் புகார்தாரரின் உறவினரின் பெயரை குற்றப்பத்திரிக்கையில் இருந்து நீக்குவதற்காக திரு.சிவானந்தம், சிறப்பு உதவி ஆய்வாளர், கீழையூர் காவல் நிலையம், நாகப்பட்டினம் மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.3,000/- யை கொடுக்குமாறு கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத புகார்தாரர் நாகப்பட்டினம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் திரு.சிவானந்தம், சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் மீது புகார் மனு அளித்தார். இதன் பேரில் நாகப்பட்டினம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு திரு.சிவானந்தம், சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.3,000/-யை பெற்ற போது கைது செய்தனர். மேலும் இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கானது நாகப்பட்டினம் மாவட்டம் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இன்று 23.11.2022 இவ்வழக்கில் குற்றவாளி திரு.சிவானந்தம், சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் புகார்தாரரிடம் லஞ்சம் ரூ.3,000/- லஞ்சம் கேட்ட குற்றத்திற்கு 1 வருடம் மெய்காவல் சிறை தண்டனையும் ரூ.5,000/- அபராதமும், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் பெற்றதற்கு 2 வருடங்கள் மெய்காவல் சிறை தண்டனையும் ரூ.5,000/- அபராதமும் விதித்து, இத்தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.